(இ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1970–71ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்குச் சட்டப் பேரவையின் பதின்மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1 திரு. பி. எஸ். தனுஷ்கோடி.
2 திரு. எஸ். பரமசிவம்.
3 திரு. மு. க. து. நடராஜன்.
4 திரு. எம். கண்ணப்பன்.
5 திரு. ஆ. கோவிந்தராசன்.
6 திரு. ந. தருமலிங்கம்.
7 திரு. மு. ஆனந்தன்.
8 திரு. என். இராஜாங்கம்.
9 திரு. எம். சுரேந்திரன்.
10. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்.
11 திரு. க. கோமதி சங்கர தீட்சிதர்.
12 திரு. ப. தம்பி நாயக்கர்.
13 திரு. என். மருதாசலம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970–71ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221(1)-வது விதிக்கிணங்க—

1. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி.
2. திரு. வீ. சா. இளஞ்செழியன்.
3. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது.
4. திரு. கே. பி. எஸ். மணி.

ஆகியவர்களை இக் குழுவின் உறுப்பினர்களாகப் பேரவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்கள்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

5. அரசினர் தீர்மானம்.

மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : " தலைவர் அவர்களே, 1970–71ம் ஆண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்வதற்கென, ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்குமாறு இப்பேரவை சட்டமேலவைக்குப் பரிந்துரை செய்கிறது " என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, அரசினர் மசோதாக்கள்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS